**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

அ.வ.எண்.69/2016 வா.சா.1 வெங்கிடாசலபதி

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 08.04.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) வா.சா.ஆ. 9 உயில் படி வழக்கு சொத்து எனக்கு பாத்தியம் என கோரி தான் நான் இவ்வழக்கை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ. 9 உயில் சுப்பே கவுண்டர் மகன் காளியப்ப கவுண்டர் எழுதியதாக சொல்லும் உயில் என்றால் சரிதான். வா.சா.ஆ. 9 உயில் பற்றி எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் 1995 வாக்கில் எனக்கு தெரிய வந்தது. எனக்கு வா.சா.ஆ. 9 உயில் பற்றி எப்படி தெரிய வந்தது என்றால் என் தாயார் குமராத்தாள் சொல்ல தெரிய வந்தது. வா.சா.ஆ. 9 உயில் யாருக்கு எழுதப்பட்டதாக என் தாயார் என்னிடம் கூறினார் என்றால் எனக்கு எழுதியதாக கூறினார்.

2) என் தாயார் 1995 ல் வா.சா.ஆ. 9 உயில் பற்றி கூறிய போது உயிலை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். நான் அசல் உயிலை பார்த்துள்ளேனா என்றால் இது வரை பார்க்கவில்லை. வா.சா.ஆ. 9 உயில் அசல் எங்கே யாரிடம் உள்ளது என தெரியுமா என்றால் என் தாயார் குமராத்தாள் வசம் இருந்தது கடந்த 2014 ல் நெகமம் சார் பதிவகத்தில் நான் நகல் எடுக்க சென்ற போது அசல் உயில் தொலைந்துவிட்டது. வா.சா.ஆ 9 உயில் பதிவு செய்யப்படாத உயில் என்றால் சரிதான்.

3) நான் அசல் உயிலை பார்த்ததே இல்லை என சாட்சியம் அளித்து உள்ள நிலையில் 2014 ல் எதனை கொண்டு நகல் எடுக்க சென்றேன் என்றால் நான் அசலை பார்த்து உள்ளேன் நான் நிறைய ஆவணங்கள் பதிவு செய்து உள்ளதால் குழம்பிவிட்டேன். அசல் உயில்

தொலைந்ததற்கு காவல் நிலையத்தில் புகார் அளித்து உள்ளேன். என் தாயார் குமராத்தாள் எப்போது இறந்தார் என்றால் கடந்த 2018 இறந்தார்.

4) நான் பொள்ளாச்சி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் என் பெற்றோர் மீது அ.வ.எண். 10/2000 வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரிதான். அவ்வழக்கில் வா.சா.ஆ. 9 உயிலின் அசலை என் வசம் ஒப்படைக்க வேண்டும் என்று தான் கோரி இருந்தேன் என்றால் சரிதான். அது தவிர்த்து அவ்வழக்கு சொத்துக்கள் என் சுவாதீனத்தில் இருப்பதாக குறிப்பிட்டு அவற்றை என் பெற்றோர் இடையூறு செய்யக்கூடாது எனவும் , அவ்வழக்கு F, G அட்டவணைச் சொத்துக்களில் பாகம் கோரியும் வழக்கு தாக்கல் செய்து இருந்தேன் என்றால் சரிதான். அவ்வழக்கில் என் பெற்றோர் ஆஜராகி வழக்கு நடத்தினர் என்றால் சரிதான். அவ்வழக்கு 30-07-2001 அன்று என் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். என் பெற்றோர் வா.சா.ஆ. 9 உயில் அசலை என்னிடம் கொடுத்ததாக அவ்வழக்கில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

5) வா.சா.ஆ. 9 உயில் நான் சொல்லும் உயிலின் புகைப்பட நகல் தான் என்றால் சரிதான். வா.சா.ஆ. 9 உயில் நகலில் 22-04-2004 தேதியிட்ட நீதிமன்ற முத்திரை காணப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 9 உயில் நகலில் அனைத்து பக்கங்களிலும் கீழே Attested என்று மட்டும் எழுதப்பட்டுள்ளது என்றும் அதற்கு அருகில் கையொப்பம் ஏதும் இல்லை என்றும் சொன்னால் சரிதான். ( **வாதி தரப்பில் 22-04-2004 தேதியிட்ட நீதிமன்ற முத்திரை இடப்பட்ட வா.சா.ஆ. 9 உயிலின் மற்றோரு புகைப்பட நகல் வாதியால் தாக்கல் செய்யப்பட்டு அது வா.சா.ஆ. 24 குறியீடு செய்யப்படுகிறது**) 2004 ல் தாக்கல் செய்யப்பட்ட போதே உயிலின் வா.சா.ஆ .24 நகலாக தான் தாக்கல் செய்யப்பட்டு அதில் அனைத்து பக்கங்களிலும் கீழே Attested என்று மட்டும் நீல மையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். உயிலின் வா.சா.ஆ.

24 நகலில் அனைத்து பக்கங்களிலும் கீழே Attested என்று மட்டும் நீல மையால் எழுதப்பட்டுள்ளது யாரால் எங்கு எப்போது எதற்காக எழுதப்பட்டது என்றால் தெரியவில்லை.

6) மேற்படி வா.சா.ஆ. 24 உயில் நகலில் Attested என எழுதப்பட்டதற்கு அருகே ஏன் எழுதியவரால் பூர்த்தி செய்யப்பட்டு கையொப்பம் இடப்படவில்லை என்றால் தெரியவில்லை. வா.சா.ஆ. 24 உயில் நகலில் Attested என எழுதப்பட்டதற்கு பிறகு அசல் இல்லை என தெரிந்ததால் தான் அது பூர்த்தி செய்யப்படாமலும் கையொப்பம் இடப்படாமலும் உள்ளது என்றால் தெரியவில்லை.

7) வழக்கு உயில் தொலைந்தாக நெகமம் காவல் நிலையத்தில் 15-09-2015 தான் புகார் அளித்ததாக வா.சா.ஆ. 21 புகார் ஏற்பு ரசீதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது தொடர்புடைய புகாரை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அப்புகாரில் அசல் உயில் என் வசம் எப்போது வந்தது என குறிப்பிட்டு இருந்தேனா என்றால் இல்லை. அப்புகாரில் அசல் உயிலை வேண்டி என் பெற்றோர் மீது அ.வ.எண். 10/2000 தாக்கல் செய்ததாகவோ , அது தள்ளுபடிசெய்யப்பட்டதாகவோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவசரத்தில் குறிப்பிடவில்லை.

8) வா.சா.ஆ. 23 சான்றில் *"… உயில் சாசன எண் 1646 நாள் 18.08.84 யை எங்கேயோ தவறவிட்டதாக கொடுத்த புகாரின் பேரில் …"* என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 22 பொது அறிவிப்பில் 22-08-1984 தேதியிட்ட உயில் காணாமல் போனதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கும் பல நபர்களுக்கும் இடையே வழக்கு சொத்து தொடர்பாக பல்வேறு வழக்குகள் இருந்தன என்றால் சரிதான்.

9) என் மனைவி பெயர் வைகுந்தம் என்றால் சரிதான். எனக்கும் என் மனைவிக்கும் சிறிது காலம் மனஸ்தாபம் இருந்ததா என்றால் இல்லை. என் மனைவி என் பெற்றோர் மீது

பொள்ளாச்சி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண். 436/2004 வழக்கு தாக்கல் செய்து இருந்தார் என்றால் சரிதான். அவ்வழக்கு எனக்கு தெரிந்து தாக்கல் செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரிந்து தான் தாக்கல் செய்யப்பட்டது. அவ்வழக்கை தாக்கல் செய்ய நான் தான் அறிவுறுத்தினேனா என்றால் ஆமாம். இவ்வழக்கு சொத்துக்கள் எங்கு உள்ளது என்றால் பெரியகளந்தை கிராமத்தில் உள்ளது.

**(2, 3 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**ஒப்பம் /-(மு.ச. ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி